https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# பாலையும் காதலும்

**திரு. இரா. பிரசன்னா**
உதவிப்பேராசிரியர்
மொழிகள் துறை – தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் – 641021

## Abstract

From the Sangam period till this time, female characters have been personified in the literature. In order to survive in the Sangam period, they have sung with the concepts of society, love, education, and the gift of bravery in the songs. Among these, the main purpose of this review article is to examine the reasons for the protagonist's inability to get along with them in the context of love, based on the message of getting along with them.

**திறவுச்சொற்கள்**

பெண்பாற் புலவர்கள் – பாலையின் கொடுமை – பிரிவு – உடன்போக்கு – தோழியின் முடிவு

## முன்னுரை

சங்ககாலம் தொட்டு இக்காலம் வரையில் பெண்பாற்புலவர்கள் இலக்கியத்தில் ஆளுமை செய்து கொண்டு உள்ளனர். அவ்வகையில் சங்ககாலத்தில் நிலைத்து நிற்பதற்குப் பாடல்களில் சமுதாயமும், காதல், கல்வி, வீரம் கொடை போன்ற கருத்தாடல்களைக் கொண்டு பாடியுள்ளனர். இவற்றில் காதல் என்ற பொருண்மையில் தலைவியின் ஆற்றாமை உடன் போக்கிற்கான காரணங்கள், உடன்போக்கு பற்றிய செய்திகளைப் பாலைத்திணை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் மையப் பொருண்மை ஆகும்.

## தலைவியின் ஆற்றாமை

பெற்றோர்கள் மகளுக்கு (தலைவிக்கு) நல்ல வாழ்க்கையை அமைத்து தன் மகளைச் சிறந்த முறையில் வாழ வைப்பது தான் திருமணம் என்ற கட்டமைப்பு அக்காலத்தில் இருந்துள்ளது. ஆனால் இதற்கு உடன்படாமல் தோழியானவள் தலைவியை விருப்பப்பட்ட தலைவனுடன் மகிழ்ச்சியாக வாழ வைக்க எண்ணுகிறாள். தான் விரும்பிய தலைவனைப் பிரிந்து மிகவும் துயருற்ற தலைவியின் ஆற்றாமையைத் தோழி ஆற்றாமை நீங்குக என தலைமகளை ஆற்றுவித்ததை,

> "நிலம் தொட்டுப் புகாஅர் வானமேறார் விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
> நாட்டின் னாட்டி னூரி னூரிற்
> குடிமுறை குடிமுறை தேரிற்
> கெடுநரு முளரோநங் காத லோரே" (குறுந்தொகை-130)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. தலைவன் இவ்வுலகத்தில் ஏதேனும் ஒரு நாட்டில் உள்ள ஊரின் குடியில் இருப்பர்; சாரணரைப் போல இவ்வுலகுக்குப் புறம்பே செல்பவரல்லர். ஆகையால் எல்லா நாட்டிலும் உள்ள ஊர்கள் யாவற்றிலும் அமைந்த குடிகளை எல்லாம் தேடின் அகப்படாமற் போதற்கு நியாயமில்லை; அங்ஙனம் தேடித் தருவேன் நீ வருத்தம் கொள்ள வேண்டாம் என்று தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள்.

இச்செய்யுளைப் பாடிய வெள்ளிவீதியார் தம்முடைய கணவனை தேடித் திரிந்த செய்தியை,

*"நெறிபடு கவலை நிரம்பா நீளிடை*

*வெள்ளி வீதியைப் போல நன்றும்*

*செலவயந் திசினால் யானே"*

(அகநானூறு-147)

எனும் வரிகள் இத்தகவலை ஔவையார் அகநானூற்றுப் பாடலில்பதிவு செய்துள்ளார். அகநானூற்றில் 45ஆம் செய்யுளில் வெள்ளிவீதியார்,

*"ஆதி மந்தி போலப் பேதுற்*

*றந்தனெ னுழல்வென் கொல்லோ"*

என்று பாடியுள்ளார் வெள்ளிவீதியார் தம் கணவனைத் தேடிய வரலாற்றை நோக்குமிடத்து அங்கனம் தேடுவதற்கு முன் அகநானூற்று 45ஆம் செய்யுளையும் குறுந்தொகை செய்யுளாகிய இதனையும் கூறினாரென்று தோன்றுகிறது.

### உடன்போக்கிற்கான காரணங்கள்

தலைவனும் தலைவியும் மனம் ஒன்றிணைந்து உடன்போக்கிற்கான காரணங்கள் பல்வேறு நிலைகளில் அமைகின்றன. இச்செறிப்பு, நொதுமலர், வரைவு, தலைவியின் ஆற்றாமை பெருக்கம் அம்பலும் அலரும் களவை வெளிப்படுத்தி விடும் என்ற மகளின் அச்சம் ஊரவரின் மிகுதியைப் பொறுக்க இயலாமை ஆகியவற்றை உடன் போக்கின் காரணமாகக் கொள்ளலாம். ஊரார் அலர் தூற்றுதல், அக்கால வரலாற்று நிகழ்வுகள் உவமைகளாகப் புலவரால் காட்டப்பட்டுள்ளன. பசலை நோயால் துன்பமடைந்த தலைவியைப் பார்த்து ஊரார் அலர் தூற்றுவது குறுக்கைப் பறந்தலை போர்க்களத்தில் திதியன் என்பவன் அன்னி அரசன் காவல் மரமான புன்னையை வெட்டிச் சாய்த்தான் அப்போது யாழிசைப் பாணர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். அப்போது அவர்கள் செய்த ஆரவாரம் போல அலர் தூற்றப்பட்டதை,

*"அண்ணி குறுக்கை பரந்தலை திதியன்*

*தொல்நிலை முழுமுதல் துமியப்*

*பண்ணி புன்னை குறைந்த ஞான்றை வயிறியர்*

*இன் இசை ஆர்ப்பினும் பெரிதே யானே"*

(அகநானூறு 45 (9-12)

என்ற பாடல் வரிகள் தெளிவுறுத்துகின்றது. இதேபோல் சங்க பாடல்களில் பல நிலைகளில் ஊரார் அலர் தூற்றுவதைக் கண்ட தோழி தலைவியின் துயர் நீக்க நீ வருந்தாதே. இந்த ஊரார் இனி பழி தூற்றிக் கொண்டே இருக்கட்டும் நான் உன்னை தலைவன் வாசிக்கும் மலை நாட்டிற்கு அனுப்ப முடிவு செய்துள்ளேன் என்று தனது எண்ணத்தை தலைவியிடம் வெளிப்படுத்துவதை,

*"ஊஉர் அலர் ஏல சேரி கல்லென*

*ஆனது அலைக்கும் அறநில் அன்னை*

*தானே இருக்க தன்மனையானே*

*நெல்லி தின்ற முள் எயிறு தயங்க*

*உணல்ஆய்ந்திசினால்அவரொடுசேய்நாட்டு*

*விண்தொட நிவந்த விலங்கு மலைக் கவாஅன்*

*கரும்புநடு பாத்தி அன்ன*

*பெருங்களிற்று அடி வழி நிலைய நீரே"*

(குறுந்தொகை-262)

என்ற பாடல் வரிகள் தெளிவுறுத்துகின்றன.

தோழியானவள் தக்க நேரத்தில் சரியான முடிவு எடுப்பவளாகத் திகழ்ந்துள்ளாள் என்பதை மேற்கண்ட பாடலின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

### உடன்போக்கு

உடன்போக்கு என்பது தலைவன் தலைவி தாமே முன்வந்து யாருடைய சம்மதமும் இல்லாமல் தன் ஊரை விட்டு சென்று திருமணம் செய்து கொள்வது. உடன் போக்கு நிகழ்ந்ததற்கான காரணங்களாக வெள்ளிவீதியார் குறிப்பிடும் காரணங்கள் இரண்டு வகையாக உள்ளன. அதில் முதலாவது தலைவன் தலைவி காதலுக்குத் தலைவியின் பெற்றோர் சம்மதிக்கவில்லை. அதனால் தலைவியும் தலைவனும் உடன்போக்கு மேற்கொள்வதை,

*"காலை பரிதப் பினவே கண்ணே*

*நோக்கி நோக்கி வாளிழந் தனவே*

அகலிரு விசும்பின் மீனினும்

பலரே மன்றவிவ் வுலகத்துப்
பிறரே” (குறுந்தொகை - 44)

என்ற குறுந்தொகை அடிகள் தெளிவு படுத்துகின்றன.

உடன்போக்கு நிகழ்ந்ததற்காக இரண்டாவது காரணமாக வெள்ளிவீதியார் குறிப்பிடுவது பெற்றோர் மறுப்பு ஒரு பக்கம் இருந்தாலும் தோழி தலைவியைத் தலைவனுடன் உடன் போக்கு செல்வதற்கு வற்புறுத்துகிறாள். முதலில் தயங்கிய தலைவியின் நாணம் இப்பொழுது காமநோய் மிகுதியால் நாணம் நீங்கி தலைவனுடன் செல்லுவதற்கு உடன்படுவதை,

அளிதோ தானே நானே நம்மோடு

நனிநீ டுழந்தன்று மன்னே இனிய
வான் பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீய்ந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக
காம நெரிதரக் கைந்நில் லாவே
(குறுந்தொகை - 149)

எனும் அடிகள் தெளிவாக எடுத்துரைக் கின்றன.

தலைவி தனக்கு இயற்கையாக உள்ள நாணத்தால் காமத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தாள் இப்பொழுது காமத்தின் மிகுதியால் நாணம் நீங்கியது. அவள் உடன் போக்கிற்குச் சம்மதித்தாள் என்பதே இப் பாடலின் கருத்தாகும். பெண்களின் காதல் வாழ்க்கை நாணத்திற்கும், காமத்திற்கும் இடையே நடைபெறும் போராட்டம் ஒரு ஆண்மகனுடன் பழகினால் ஊர் மக்களும் உற்றாரும் பழிச் சொற்கள் கூறுவார்களோ என்ற அச்சம் ஒரு பக்கமும், மற்றொரு பக்கம் காமஉணர்வும் பெண்களை வருத்து வதாக இலக்கியத்தில் பல பாடல்களில் காண்கின்றோம்.

மாறு நின்று எதிர்ந்த அறுசெல் வம்பலர்
உவல்இடு பதுகை ஊரின் தோன்றும்
கல் உயர் நடந்தலை நல்ல கூறி
புணர்ந்துடன் போதல் பொருள்
(குறுந்தொகை (297:3-6)

நீ செலவு அயரக் கேட்டோறும் பல
நினைத்து
அன்பின் நெஞ்சத்து அயாஅப் பொறைந்து
மெலிந்து
என்நகத்து இடும்பை கலைவார் நின்னுடு
மணமண அமலும் காணும்
துணை ஈர் மோதி என் தோளையும் வருமே
(அக. 107 : (1-3, 21-22)

என்ற பாடல் தெளிவுறுத்துகின்றது. உதாரண மாகத் திருக்குறளில் ஞானத்திற்கும் காமத்தி ற்கும் இடையே நடைபெறும் போராட்ட த்தை திருவள்ளுவர் மிக அழகாகச் சித்தரிக்கிறார்.

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு (குறள் - 1251)
காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ
பொறேன் இவ் விரண்டு (குறள் - 1247)
காமமும் நானும் உயிர் காவாத்
தூங்குமென்
நோனா உடம்பின் அகத்து (குறள் - 1163)

மேற்கண்ட அனைத்து பாடல்களிலுமே உடன்போக்கு பற்றிய செய்திகள் விரைவிக் கிடைக்கின்றன. தலைவி பெற்றோருக்கு மட்டும் அஞ்சவில்லை. ஊரார்கள் பழித் தூற்றுவார்கள் என்று எண்ணி உடன் போக்கு நிகழ்த்தாமல் பல காலம் தாமதிக்கி ன்றாள். இதனைத் தோழி கண்டித்து உடன் போக்கு நிகழ்த்த வற்புறுத்துகிறாள். இறுதி யில் தலைவனும் தலைவியும் இணைந்து தங்களது வாழ்வை இனிமையாக நடத்துகின் றனர். இந்நிகழ்வுகள் அனைத்தையுமே சங்க இலக்கியப் புலவர்கள் தங்களது செய்யுட் களில் பதிவு செய்துள்ளனர்.

## முடிவுரை

தலைவி என்பவள் அக்காலத்தில் தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாதவளாகச் சங்க இலக்கியம் காட்டுகின்றது. சில இடங்களில் தான் சுயமாகச் சிந்தித்து முடிவு எடுக்கின் றாள். முக்கிய முடிவு எடுப்பவளாகத் தோழிதான் இருந்துள்ளாள். உடன்போக்கு சமயத்தில் கூட தோழிதான் சிறந்ததொரு முடிவை எடுக்கின்றாள். தலைவனும் தலைவி யும் உடன்போக்கு நிகழ்த்தும் சமயத்தில் அவர்கள் கொடுமையான சுரத்தைக் கடக்க நேரிடும் வேளையில் அவர்கள் படுகின்ற துன்பங்கள், தலைவி வீட்டார் படும் துன்பங் கள் என பல்வேறு செய்திகளை இக் கட்டுரை விரிவாக விளக்குகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. சாமிநாத ஐயர் உ.வே - குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ வே சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை 6 0

2. ராகவையங்கார். ரா - அகநானூறு மூலமும் பழைய உரையும், கம்பர் விலாசம் - 1923.

3. வரதராசன்.மு, குறள் காட்டும் காதல், பாரி நிலையம், பிராட்வே, சென்னை - 2009